வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 08.04.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*__தலைப்புச் செய்திகள்__*

- புதுச்சேரி, கேரளா மற்றும் அஸ்ஸாம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான, வாக்குப்பதிவு, நாளை ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.
- புதுச்சேரியில், வாக்காளர்கள் அனைவரும் இந்தத் தேர்தல் திருவிழாவில் பங்கேற்று, 100 சதவிகித வாக்குப் பதிவை உறுதி செய்யுமாறு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் கேட்டுக் கொண்டுள்ளார்.
- காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி. இஷிதா ராட்டி, வாக்குப் பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லும் வாகனங்களை அனுப்பும் பணிகளை, கொடியசைத்து துவக்கி வைத்தார்.
- இளைஞர்களிடையே சுய தொழிலை ஊக்குவிப்பதில், பிரதான் மந்திரி முத்ரா யோஜனா திட்டம் மிகவும் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

*__தேர்தல் (6)__*

புதுச்சேரியில் உள்ள 30 சட்டமன்றத் தொகுதிகள், கேரளாவில் உள்ள 140 தொகுதிகள், மற்றும் அஸ்ஸாமில் உள்ள 126 சட்டமன்றத் தொகுதிகளுக்கான, வாக்குப்பதிவு, நாளை ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான வாக்குப் பதிவை உறுதி செய்வதற்காக பாதுகாப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை அதிகாரிகள் தீவிரப்படுத்தி உள்ளனர்.

*<u>பாண்டிச்சேரி -1 (12)</u>*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் ஆகிய 4 பிராந்தியங்களில், மொத்தம் 30 சட்டமன்றத் தொகுதிகளுக்கும், ஒரே கட்டமாக, நாளை வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. 30 தொகுதிகளுக்கும் மொத்தம் 294 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். புதுச்சேரி மற்றும் காரைக்காலில் 17 தேர்தல் நடத்தும் அதிகாரிகளும், 30 உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளும், தேர்தல் பணிகளில் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்த காலகட்டத்தில், பணப்பட்டுவாடா, மது விநியோகம், அன்பளிப்புகள் ஆகியவற்றை கண்காணிக்கவும், செலவினங்களை மதிப்பிட வீடியோ பதிவுகளை ஆய்வு செய்யவும், பறக்கும் படைகள், நிலை கண்காணிப்புக் குழுக்கள், வீடியோ குழுக்கள் மற்றும் கணக்கு குழுக்கள் ஆகிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் நியமிக்கப்பட்டுள்ளன.

*<u>பாண்டிச்சேரி -2 (15)</u>*

புதுச்சேரியில், மொத்தம் ஆயிரத்து 99 வாக்குச் சாவடிகள் தயார் நிலையில் உள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இதில், புதுச்சேரி வ.உ.சி அரசு மேல்நிலைப் பள்ளி, கீழூர் அரசு நடுநிலைப் பள்ளி மற்றும் காரைக்கால் தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகியன, தனித்துவமான வாக்குச் சாவடிகளாக, வடிவமைக்கப்பட்டுள்ளன என்று திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார். மேலும், பெண்களே நிர்வகிக்கும் 30 மகளிர் வாக்குச் சாவடிகள், தொகுதிக்கு ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளன. இளைஞர்களே நிர்வகிக்கும் 15 இளைஞர் வாக்குச்சாவடிகளும், 2 வாக்குச் சாவடிகள் முழுவதும் மாற்றுத் திறனாளிகளால் நிர்வகிக்கப்பட உள்ளன. வாக்குச் சாவடிகளில் மொத்தம் 4 ஆயிரத்து 836 அரசு ஊழியர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். வாக்குச் சாவடி கண்காணிப்புப் பணியில், 2 ஆயிரத்து 791 காவல்துறையினர் மற்றும் நுண் பார்வையாளர்கள் 173 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். முதியோர் மற்றும்

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி செய்யவும், வாக்காளர்களின் கைபேசிகளை பாதுகாக்கவும், 2 ஆயிரத்து 198 மாணவ தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

***பாண்டிச்சேரி - 3 (7)***

அனைத்து வாக்குச் சாவடிகளிலும், போதுமான விளக்குகள், மேசை-நாற்காலிகள், குடிநீர் வசதி, சாய்வுப் பாதை வசதி, குறியீட்டு பலகைகள், கழிப்பறை வசதி, நிழற்குடை உள்ளிட்ட குறைந்தபட்ச வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வாக்காளர்கள் அனைவரும் இந்தத் தேர்தல் திருவிழாவில் பங்கேற்று, 100 சதவிகித வாக்குப் பதிவை உறுதி செய்யுமாறு திரு. ஜவஹர் கேட்டுக் கொண்டுள்ளார்.

***தேர்தல் பார்வையாளர் (10)***

சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் திட்டம் என்பது தேர்தல் மேலாண்மை அமைப்புகள் மற்றும் உலகளாவிய அமைப்புகளுடன் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் முதன்மை முயற்சியாகும்.

மேலும், இந்த தேர்தல் நடைமுறைகளை பார்வையிட கிர்கிஸ் குடியரசு, ஐவரி கோஸ்ட், மால்டோவா, மங்கோலியா, கயானா மற்றும் பூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த, தேர்தல் மேலாண்மையில் உள்ள 9 பிரதிநிதிகள் புதுச்சேரி வந்துள்ளனர். அவர்கள் வ.உ.சி அரசு மேல்நிலைப் பள்ளி, கீழூர் அரசு நடுநிலைப்பள்ளி ஆகிய வாக்குச் சாவடிகளில் தேர்தல் நடைமுறைகளை பார்வையிட உள்ளனர்.

***அஸ்ஸாம் (8)***

வெளிப்படையான செயல்முறையை உறுதி செய்வதற்காக, அஸ்ஸாமில் உள்ள அனைத்து 31 ஆயிரத்து 490 வாக்கு சாவடிகளும், நேரடி ஒளிபரப்பு கண்காணிப்பின் கீழ் இருக்கும் என்று, தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. அனுராக் கோயல் அறிவித்துள்ளார். 1.5 லட்சம் வாக்குப் பதிவு பணியாளர்கள் மற்றும் 43 ஆயிரத்துக்கும் மேற்பட்ட VVPAT இயந்திரங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில், சுமூகமான தேர்தலுக்கான நிர்வாகம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

***காரைக்கால் -1 (4)***

காரைக்கால் மாவட்டத்தில், நாளை வாக்குப் பதிவு நடைபெற உள்ளதையொட்டி, தேர்தல் பணிகளுக்காக 181 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு, அவற்றில் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

***காரைக்கால் - 2 (16)***

(வாய்ஸ்)

வாக்குப் பதிவு, காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை, நடைபெறும் என்றும், நேற்று மாலை 7 மணி முதல், வரும் வெள்ளிக் கிழமை காலை 6 மணி வரை, மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் பணியில், ஆயிரத்து 264 பாதுகாப்புப்படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

181 வாக்குச் சாவடிகளுக்கான 775 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனுப்பும் பணி, காவல்துறை மற்றும் துணை ராணுவத்தினரின் பாதுகாப்புடன் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. முன்னதாக, இப்பணிகளை பார்வையிட்ட காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி. இஷிதா ராட்டி மற்றும் சார்பு ஆட்சியர் செல்வி. பூஜா ஆகியோர்,

வாக்குப் பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லும் வாகனங்கள் அனுப்பும் பணிகளை, கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், ஆதார், ஓட்டுநர் உரிமம், பான் கார்டு, கடவுச்சீட்டு, ரேஷன் கார்டு உள்ளிட்ட 12 மாற்று ஆவணங்களை பயன்படுத்தி, வாக்களிக்கலாம். இதுவரை 99.5 சதவிகித வாக்காளர்களுக்கு தகவல் சீட்டுகள் விநியோகிக்கப் பட்டுள்ளது என்றும், வாக்குப் பதிவு நாளன்று பொதுவிடுமுறை என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*காரைக்கால் - 3(5)*

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள நெடுங்காடு, திருநள்ளாறு, காரைக்கால்-வடக்கு, காரைக்கால் – தெற்கு மற்றும் நிரவி திருப்பட்டினம், உள்ளிட்ட 5 சட்டமன்றத் தொகுதிகளிலும், இணையவழி கண்காணிப்பு வசதி செய்யப் பட்டுள்ளதுடன், பதற்றமானவை என்று கண்டறியப்பட்ட 36 வாக்குச் சாவடிகளுக்கு, கூடுதல் மத்திய ஆயுத காவல் படையினர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

*ஏனாம் (6)*

ஏனாம் பிராந்தியத்தில், வாக்குச் சாவடி ஊழியர்களுக்கு வாக்குப் பதிவு பொருட்கள் விநியோகம் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றை தேர்தல் அதிகாரி திரு. சிவராஜ் மீனா, இன்று துவக்கி வைத்தார். ஏனாம் பகுதியில் உள்ள 42 வாக்குச் சாவடிகளில் 37 ஆயிரத்து 920 வாக்காளர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்ய உள்ளனர். வாக்குச் சாவடிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளை திரு. சிவராஜ் மீனா ஆய்வு செய்தார்.

□ாஹே (5)

மாஹே பகுதியில் நாளை நடைபெற உள்ள தேர்தலுக்காக, 31 வாக்குச் சாவடிகளில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மற்றும் VVPAT இயந்திரங்கள் இன்று பிற்பகல் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டன. தேர்தலை சுமூகமாக நடத்துவதை உறுதி செய்ய மத்திய படைகள் உட்பட சுமார் 650 காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ே□ாடி (13)

இளைஞர்களிடையே சுய தொழிலை ஊக்குவிப்பதில், பிரதான் மந்திரி முத்ரா யோஜனா மிகவும் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். 2015இல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், இன்று 11 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. தனி நபர்களுக்கு சரியான வாய்ப்புகள் வழங்கப்படும் போது, அவர்கள் சுயசார்பு உடையவர்களாக மாறுவதோடு, நாட்டின் முன்னேற்றத்திற்கும், சிறந்த முறையில் பங்களிக்க முடியும் என்பதை இத்திட்டத்தின் வெற்றி காட்டியுள்ளது என்று பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான் மந்திரி முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ், இதுவரை 40 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான சுமார் 58 கோடி ரூபாய் கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்றும், இந்த கடன்களில் 3இல் 2 பங்கு பெண் தொழில் முனைவோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜெங்சங்கர் (9)

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இன்று பிற்பகல், புதுடெல்லியில், வங்க தேச வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. கலீலுர் ரஹ்மானை, சந்தித்து கலந்துரையாடினார். 3 நாள் அரசுமுறைப் பயணமாக, நேற்று, புதுடெல்லி வந்தடைந்த திரு. ரஹ்மான், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல், மத்திய வர்த்தகம்

மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் மற்றும், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி ஆகியோரை சந்திக்க உள்ளார். திரு. ரஹ்மான் பதவியேற்ற பிறகு, புதுடெல்லிக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

***<u>ரிசர்வ் வங்கி (10)</u>***

இந்திய ரிசர்வ் வங்கி வட்டி விகிதங்களை 5.25 சதவிகிதமாக மாற்றாமல் வைத்துள்ளது. நடப்பு நிதியாண்டிற்கான  முதல் இரு மாத பணவியல் கொள்கையை அறிவித்த ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா, பணவியல் கொள்கைக் குழு, நடுநிலையான நிலைப்பாட்டுடன் ரெப்போ வட்டி விகிதத்தை, 5.25 சதவிகிதமாக தக்க வைக்க ஒருமனதாக முடிவு செய்துள்ளதாகக் கூறினார். ஆளுநரின் தலைமையில், குழுவின் இருமாத கூட்டம் திங்களன்று தொடங்கியது. கடந்த நிதியாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.6 சதவிகிதமாகவும், நடப்பு நிதியாண்டில், 6.9 சதவிகிதமாகவும் இருக்கும் என்று, பணவியல் கொள்கைக் குழு கணித்துள்ளது.